# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 11 ஆகஸ்ட் 2021 பிரதி – 5**



# ஆயர் மடல்



கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

நற்செயல்களுக்கு முன்மாதிரியாய், சுதந்திர வாழ்வை தந்த இறை இயேசுவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் மாதம் என்றவுடன் இந்திய சுதந்திர தினம் நம் நினைவுக்கு வருகிறது. அரசியல் சுதந்திரத்தை பெற்றுக்கொண்டிருக்கும் நாம் ஆன்மீக சுதந்திரத்தை ஆண்டவரிடம் பெறும் அனுபவமே நற்செயல். **“கிரியை இல்லாத விசுவாசம் செத்தது”** எனத் திருமறை கூறுகிறது. ஆன்மீக வாழ்வில் சுதந்திரம் என்பது நம்முடைய நற்செயல்கள் மூலம் இயேசுகிறிஸ்துவை வெளிக்காட்டி நாமும் நம்மைச் சார்ந்தவர்களும் நிலைவாழ்வுக்கு நேராய் அடி எடுத்து வைப்பதுவே.

நம்முடைய திருச்சபையின் பல அங்கத்தினர்கள் பணி நிறைவுற்று இந்தியாவுக்கு செல்ல இருக்கின்றனர். அவர்களின் தொடர் வாழ்வு, பணிகள், பயணங்களுக்காய் அதிகமாய் ஜெபித்துக்கொள்வோம்.

நமது திருச்சபையின் திருப்பணிகளில் தொய்வு ஏற்படாது வளரவும், ஆத்துமாக்களினால் ஆலயம் நிரப்பப்படவும் பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

இந்திய தேசத்தின் கடினமான சூழலை நாம் ஊடகங்கள் வழி அறிந்து வருகிறோம். மீண்டும் பரவிவரும் வைரஸ் தாக்கம் முழுமையாய் நீங்கப் பெறவேண்டும் என வேண்டுதலைத் தொடர்வோம். நமது பெற்றோர், குடும்பம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் காக்கப்படவும் ஆண்டவரின் ஆசீர்வாதம் பெறவும் மன்றாடுவோம்.

நமது திருச்சபையில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு நிறைவுற்று நல்ல மதிப்பெண் பெற்றிருக்கும் அனைத்துப் பிள்ளைகளையும் அன்போடு வாழ்த்துகிறேன். குறிப்பாக உயர்கல்விகளை பெற்று உயர்நிலை பெற அன்போடு இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்தி ஜெபிக்கிறேன்.

புதிய மாதத்தின் புதிய ஆசிகளோடு பணிகளைத் தொடர்வோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## நற்செயல்

**“உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக” ரூத் 2:12**

நற்செயல் புரிய நம்மை அழைத்த ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.




நமது நற்செயல்களே நமது நற்பலனைத் தரும் என்று திருமறை வார்த்தைகள் மூலம் ஆண்டவர் உரைக்கிறார். நமது வாழ்வின் செயல்கள் என்பது நாம் தீர்மானிப்பவை. அதில் நற்செயல் எது? தீய செயல் எது? என்பது நாமும் அறிவோம், கர்த்தரும் அறிவார்.

நல்நோக்கத்தோடு செய்யப்படும் துன்ப செயல்களும் உண்டு. தீய நோக்கத்தோடு செய்யப்படும் நற்செயல்களைப்போல வெளிக்காட்டும் செயல்களும் உண்டு. ஆனால் திருமறை அதை தெளிவுப்படுத்தி உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவார் என கூறுகிறது.

### செய்கைகளில் புத்திமானாயிருப்போம்:-

**“தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான். கர்த்தர் அவனோடே கூட இருந்தார்” 1சாமு. 18:14**

நம்முடைய செய்கைகளே நம்மை தீர்மானிக்கின்ற தராசு எனலாம். நாம் நற்செயல் புரியும்போது நமது செயல்கள் புத்திமானுடைய செய்கைகளாக மாறுகிறது. புத்திமானுடைய செய்கைகளாக நமது செய்கை உருவாகும்போது கர்த்தர் நம்மோடுகூட இருப்பார். இந்நிலைதான் தாவீதுடைய வாழ்வில் ஏற்பட்டது. புத்திமானாய் நடக்கும்போது கர்த்தர் அவனோடு இருந்தார். புத்தியற்றவனாய் நடக்கும்போது கர்த்தர் விலகினார். நீதிமொழிகள் 16:3 கூறுகிறது “உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்”. நமது செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவித்து செய்யும்போது கர்த்தர் நம்மோடிருப்பார். புத்திமானாய் நடக்கசெய்து ஆசீர்வதிப்பார்.

## செய்கைகளில் பாக்கியவானாயிருப்போம்:-

பாக்கியவான் என்னும் திருமறை சொல்லுக்கு ஆழமான பொருள் உண்டு. அது ஆன்மீக வாழ்வு, உலக வாழ்வு, உள்ளம் சார்ந்தது, உடல் சார்ந்தது, குடும்பம் சார்ந்தது, தனிவாழ்வு சார்ந்தது என பல நிலைகளில் நிறைவைத் தரும், உயர்வைத் தரும், ஆசி, சமாதானம், வாழ்வு தரும் ஒன்றாக அமைகிறது.

இந்த ஆசிபெற திருமறை கூறும் ஓர் ஆலோசனை, கர்த்தருடைய திருவசனத்தை "உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கைகளில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்கோபு 1:25).

திருவசனம் பார்க்கிறவனாய், கேட்கிறவனாய் மட்டுமல்ல அதன்படி செய்கிறவனாயிருக்கிறவன் பாக்கியவான். இதன் ஆழமான பொருள் ஒரு மனிதன் பாக்கியவானாய் மாற வேண்டுமாயின், திருவசனம் கூறும் நற்செயல்களை தன் வாழ்வில் செய்கிறவனாய் இருக்கவேண்டும் எனத் திருமறை வலியுறுத்துகிறது.

## செய்கைகளில் பலன்பெறுவோம்:-

**"தேவரீர் அவனவன் செய்கைக்குத்தக்கதாக பலனளிக்கிறீர்" (சங்கீதம் 62:12)**

நமது செய்கைகளே நமக்கு பலனளிக்கும் என திருமறை கூறுகிறது. பொதுவாக கிராமத்துப் பகுதிகளில் கூறும் பழமொழி ஒன்று உண்டு,

**"தினை விதைத்தவன் தினை அறுப்பான்**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்"**

நம்முடைய நற்செயல்கள் நமக்கு நன்மையைத்தரும் என்னும் உணர்வோடு வாழவும் செயல்படவுமே கர்த்தர் நம்மை அழைக்கிறார்.

**"உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" 2யோவான் 1:8.**

நம்முடைய நற்செயல்களின் பலன் நம்மைத் தொடர்ந்து வருகிறது. அதன் பூரண பலனை நாம் பெறவேண்டும் என்னும் உணர்வோடு, துர்செய்கைகளை நம்மைவிட்டு தூரப்படுத்தவேண்டும் என ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நல்ல பலனை, நன்மைக்கு ஏதுவான பலனை நாம் பெற நற்செயல் நம்மை நடத்துகிறது. கர்த்தரும் நம் நற்செயல்கள் வழியே நம்மை ஆசீர்வதிக்கிறார்.

பிரியமானவர்களே! நற்செயல்களில் புத்திமானாயிருப்போம், நமது செயல்களை கர்த்தருக்கு ஒப்புவிப்போம். நற்செயல்களில் பாக்கியவானாயிருப்போம், திருவசனங்களை நிறைவேற்றுவோம், நற்செயல்களில் பலன்பெறுவோம், நன்மை வழிநடந்து நல்லாசி பெறுவோம்.

புதிய மாதத்தில் புதிய தீர்மானங்களோடு வாழ்வைத் தொடர கர்த்தர்தாமே உங்கள் யாவரையும் காத்து வழிநடத்துவாராக! ஆமென்!

**அன்புடன் போதகர்**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## "உயிர்களைக் காப்பாற்றிய நற்செயல்"



படகு ஒன்றுக்கு பெயின்ட் அடிப்பதற்கான பொறுப்பு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் பிரஷ், பெயின்ட் என்பவற்றைக் கொண்டு வந்து படகு உரிமையாளர் வேண்டிக்கொண்டதைப்போலவே பிரகாசமான சிவப்பு நிறத்தில் பெயின்ட் அடித்துக் கொடுத்தார். பெயின்ட் அடித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் படகில் ஒரு சிறிய ஓட்டை இருப்பதை அவதானித்து, உடனடியாகவே அந்த ஓட்டையை சரிவர அடைத்து விட்டார். வேலை முடிந்ததும் அவர் தனக்குரிய கூலியை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்.

அடுத்தநாள் படகின் உரிமையாளர் அந்த பெயின்டரின் வீடு தேடி வந்து ஒரு பெறுமதிமிக்க காசோலையை கொடுத்தார். அது அவர் ஏற்கெனவே கூலியாக வழங்கிய தொகையைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகமானது. பெயின்டருக்கோ அதிர்ச்சி! நீங்கள்தான் ஏற்கெனவே பேசிய கூலியைத் தந்துவிட்டீர்களே? எதற்காக மீண்டும் இவ்வளவு பணம் தருகிறீர்கள்? என்று கேட்டார் பெயின்டர். இல்லை இது பெயின்ட் அடித்ததற்கான கூலி அல்ல. படகில் இருந்த ஓட்டையை அடைத்ததற்கான பரிசு என்றார் படகின் உரிமையாளர்.

இல்லை ஐயா, அது ஒரு சிறிய வேலை. அதற்காக இவ்வளவு பெரிய தொகைப் பணத்தைத் தருவதெல்லாம் நியாயமாகாது. தயவுசெய்து காசோலையைக் கொண்டு செல்லுங்கள் என்றார் பெயின்டர்.

நண்பரே! உங்களுக்கு விசயம் புரியவில்லை. நடந்த விசயத்தைச் சொல்கிறேன், கேளுங்கள் என்று சொல்லிவிட்டு படகு உரிமையாளர் தொடர்ந்தார். நான் உங்களை படகுக்கு பெயின்ட் அடிக்கச் சொல்லும்போது அதில் இருந்த ஓட்டைப்பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். பெயின்ட் அடித்துவிட்டு நீங்களும் போய்விட்டீர்கள். அது காய்ந்த பிறகு எனது பிள்ளைகள் படகை எடுத்துக்கொண்டு மீன்பிடிக்க கிளம்பிவிட்டார்கள்.

படகில் ஓட்டை இருந்த விசயம் அவர்களுக்குத் தெரியாது. நான் அந்த நேரத்தில் அங்கு இருக்கவுமில்லை. நான் வந்து பார்த்தபோது படகை காணவில்லை. படகில் ஓட்டை இருந்த விசயம் அப்போதுதான் நினைவுக்கு வர நான் பதறிப்போய்விட்டேன். கரையை நோக்கி ஓடினேன். ஆனால் எனது பிள்ளைகளோ மீன் பிடித்துவிட்டு மகிழ்ச்சியாக திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். அந்த கணம் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் அளவேயில்லை. உடனே படகில் ஏறி ஓட்டையைப் பார்த்தேன். அது நேர்த்தியாக அடைக்கப்பட்டிருந்தது. இப்போது சொல்லுங்கள். நீங்கள் செய்தது பெறுமதியற்ற சிறியதொரு வேலையா? நீங்கள் என்னுடைய பிள்ளைகளின் விலைமதிக்க முடியாத உயிர்களையல்லவா காப்பாற்றியிருக்கிறீர்கள்? உங்களது இந்தச் சிறிய நற்செயலுக்காக நான் எவ்வளவுதான் பணம் தந்தாலும் ஈடாகாது என்றார்.

நண்பர்களே! இதிலிருந்து என்ன புரிகிறது. யாருக்கு, எங்கோ, எப்போது, எப்படி என்றெல்லாம் பார்க்கவேண்டியதில்லை. நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிரதிபலன் பாராது உதவுவோம். பிறரின் கண்ணீரைத் துடைப்போம். நம் கண்முன்னே தெரியும் ஓட்டைகளை அடைப்பதற்கான மனிதர்களை இறைவன் அறியாப்புறத்திலிருந்து நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பார்.

**அன்புடன் போதகர்**

## *New Arrivals*

### "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Miss. Ashira Jubilee Seona**

**D/o Mr. Arun S Paul & Mrs. Saja**

**30-06-2021**

## "கர்த்தர் கொடுத்த பந்தம்"

**ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 3:13-14).**




கிறிஸ்து இயேசுவில் அன்பானவர்களே!

உங்கள் யாவருக்கும் ஆகஸ்ட் மாத வாழ்த்துக்கள். நற்செயல் என்னும் தலைப்பில் வெளிவரும் இம்மாத இதழின் சிந்தனை, குடும்பத்தில் பெண்களாகிய நாம் நமது நற்செயல்கள் மூலம் கர்த்தர் நமக்கு கொடுத்த பந்தமாகிய குடும்பத்தை காப்பதும், வளர்ப்பதும், இணைப்பதும் நமது கடமை.

இன்று குடும்பத்தை தாங்கி, மன்னித்து, அன்பு செலுத்தி குடும்பமே வேண்டாம் என நீதிமன்றங்களை நாடும் நிலையே அதிகமாக உருவாகியுள்ளது.

சென்னையில் உள்ள குடும்ப நீதிமன்றங்களில் அநேக விவாகரத்து வழக்குகள் தீர்வு அளிக்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளன. சென்னையில் மாத்திரம் தினமும் சுமார் 30 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ்வழக்குகள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடிப்பது என்பது இமாலய சாதனையாக உள்ளது. இதனால் கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கவேண்டிய தேவையில் தமிழ்நாடு உள்ளது. கணவன் மனைவி உறவில் ஏன் இந்த பிரச்சனை என்பது குறித்து ஆராய்ந்தபோது ஒட்டுமொத்தமாக வெளிப்படும் ஒரு காரணம் என்னவெனில், தன்னல நோக்கமுள்ள அகங்காரம், அதாவது நான் என்ற எண்ணமே என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர்.

மனரீதியான ஆலோசனை மையங்கள் இவர்களுக்கு சொன்னாலும் ஆலோசனைகள் எடுபடுவதில்லை. கணவன், மனைவி உறவு குறித்த வழக்குகளை மிகவும் கருத்தாய் மென்மையாய் செய்யவேண்டும். மற்ற வழக்குகளைப்போல கருதக்கூடாது என மனநல நிபுணர்கள் கூறுகின்றனர்.

## 1. ஒருவரையொருவர் தாங்கி:- (கொலோசெயர் 3:13-14)

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் கணவனும், மனைவியும் அவர்களுடைய தாய் அவர்களை பார்க்க வரும்போது, மிகவும் ஐக்கியமுள்ளவர்கள் போல நடிப்பார்கள். அந்த தாய், என் மகள் நன்றாக இருக்கிறாள் என்று சந்தோஷத்துடன் செல்வார்கள். அவர்கள் அந்த பக்கம் போனவுடன் கணவன் அந்த மனைவியை கண்மண் தெரியாமல் அடிப்பான். அதில் காயம் ஏற்பட்டால், நான் தவறி கீழே விழுந்து விட்டேன், அதனால் காயம் ஏற்பட்டுவிட்டது என்று அந்த மகள் பொய் சொல்லுவாள் மற்றும் அந்த மனிதன் குடிப்பான், பிள்ளைகளை அடிப்பான். அவள் மிகவும் மெலிந்து கொண்டே போனாள். கேட்டால் நான் டயட்டிங்கில் இருக்கிறேன் என்று பொய் சொல்வாள். இப்படி எத்தனை நாட்கள் போய்க் கொண்டிருக்க முடியும்? ஒருநாள் அது வெளிபட்டு விவாகரத்து ஏற்பட்டது.

ஒருவரையொருவர் தாங்க வேண்டிய குடும்பத்தின் தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் தாக்கும் சூழல்களே அதிகமாக உள்ளன.

1பேதுரு 3:1,2 "மனைவிகளே உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்"

கொலோசெயர் 3:19-ல் "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" என்றும் 1பேதுரு 3:7-ல் "புருஷர்களே மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால்..... அவர்களுக்கு செய்யவேண்டிய கனத்தை செய்யுங்கள்" என்றும் கூறப்படுகிறது.

ஒருவரையொருவர் தாங்கி வாழவே குடும்ப அமைப்பை ஆண்டவர் தந்திருக்கிறார் என்பதை உணர்வோம்.

## 2. ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்:- (கொலோசெயர் 3:13-14)

நான் ஏன் இவரை அல்லது இவளை திருமணம் செய்தேன்? என்று நம்மில் அநேகர் நொந்து கொள்கிறோம். தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் (ஆதி. 2:18) என்றுதான் ஆதாமுக்கு ஏவாளை உண்டாக்கினார். ஆகவே உங்களுடைய கணவர்தான் உங்களுக்கு ஏற்ற துணை. உங்கள் மனைவிதான் உங்களுக்கு ஏற்ற துணை. இது கர்த்தர்

ஏற்படுத்திக் கொடுத்த பந்தம். ஆகவே கர்த்தர் இணைத்ததை மனிதன் அல்லது மனுஷி பிரிக்காதிருக்கக்கடவர்கள்.




கணவன் மனைவிக்கு இடையே எழும் வாக்குவாதங்களை விட்டுக் கொடுப்பதும், ஏற்றுக்கொள்வதும், மன்னிப்பதுமே குடும்ப வாழ்வின் அடிப்படை. இதில் எந்த ஒரு ஈகோவும் இருக்கக்கூடாது. அவள்தானே செய்தாள் அவள் பேசட்டும் என்றும், அவர் பேசட்டும் என்றும் பிடிவாதமே அநேக குடும்பங்களின் பிளவுக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

“புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமையை செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்கு செய்யக்கடவள்” (1கொரி. 7:3).

ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவர்கள், ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் எனத் திருமறை நமக்குப் போதிக்கிறது.

### 3. அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்:- (கொலோசெயர் 3:13-14)

கணவன் மனைவியிடம் அன்பு குறைந்து விரிசல்கள்தான் அதிகமாய் காணப்படுகின்றது. இந்நாட்களில், காதல் திருமணங்கள் அதிகரித்திருக்கிற நிலையில், அதற்கு சினிமாக்களும் காரணம் என்றே நாம் சொல்லமுடியும். பெற்றோர் பார்த்து வைக்கிற திருமணங்களிலேயே வரதட்சணை காரணமாக பிரச்சனைகள் வரும்போது, காதல் திருமணங்களில் பிரச்சனைகளுக்கு சொல்லவா வேண்டும். அது ஆரம்பத்தில் மிகவும் இனிமையாகத் தோன்றும். ஆனால் காலம் செல்லும்போது அந்த கவர்ச்சிபோய், அவர்களுடைய சிறிய சிறிய தவறான காரியங்களும் பெரியவைகளாய்த் தோன்றும். எடுத்ததற்கும், தொடுத்ததற்கும் சண்டை. இதுதான் இன்றைய குடும்பங்களின் நிலைமை. கிறிஸ்தவ குடும்பங்களும் இதற்கு விலக்கல்ல.

திருமணம் செய்ய முன்வரும்போது வேதத்திலுள்ள காரியங்களை மனதில் கொண்டு செய்யவேண்டும். திருமணத்தில் இணையப்போகிற இருவரும் கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும். அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; “நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?” (2கொரி. 6:14).

அவிசுவாசியை மணந்த ஒரு சகோதரியின் வாழ்வில் காணப்படும் பிரச்சனைகளுக்கு அளவேயில்லை. சுதந்திரமாக தேவனைத் துதிக்கவும் வீட்டில் தடை. ஆரம்பத்தில் தோன்றும், 'நான் அவரை எப்படியாவது மாற்றிவிடுவேன்' என்று, ஆனால் திருமணம் என்று ஆகிவிடும்போது அதுவரை சொன்னதற்கெல்லாம் வளைந்த மனிதர், இப்போது தான் சொன்னதே சட்டம் என்று மாறிவிடுவார். அப்போது அதிலிருந்து வெளிவரமுடியாத நிலைமை ஏற்படும். ஆகவே அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்ற வேத வசனத்தை கைக்கொண்டே ஆகவேண்டும்.


கணவன் மனைவி இருவரும் பேசுவதற்கு நேரம் ஒதுக்கவேண்டும். இருவரும் வேலை, வேலை என்று ஓடிவிட்டு சாயங்காலம் களைப்பாக வந்து சாப்பாடு செய்து சாப்பிட்டு தூங்குவதற்குதான் சரியாக நேரம் இருக்கும். பின் பிள்ளைகளுக்கும், கணவனுக்கும், மனைவிக்கும் ஏது நேரம் ஒதுக்குவது? எப்படியாவது ஒரு அரைமணி நேரமாவது ஒதுக்கி இருவரும் அமர்ந்து குடும்ப காரியங்களைக் குறித்து பேசவேண்டும். அதன்மூலம் எத்தனையோ சச்சரவுகளை தவிர்க்கலாம். ஆனால் சிலர் வீட்டில் பேச ஆரம்பித்தாலே சண்டைதான். அப்படியிருக்காமல் அமைதியாக பேசி குடும்பத்தோடே ஜெபம் செய்துவிட்டு சாந்தத்தோடே படுக்கைக்கு செல்லவேண்டும்.

ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவையெல்லாவற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் என்ற கர்த்தருடைய வசனத்தின்படி ஒருவரையொருவர் மன்னித்து, அன்பை அடித்தளமாக வைத்து குடும்பத்தை கட்டி எழுப்புவோம். கர்த்தர் மூன்றாவது நபராக அந்தக் குடும்பத்தில் இருந்து, முப்புரிநூல் அறாது என்ற வசனத்தின்படி, கணவனும் மனைவியும் தேவனுமாக ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக, தேவன் தங்கி இருக்கிற குடும்பமாக, அவரே அந்தக் குடும்பத்தின் தலைவராக இருந்து, தாங்கி நடத்துகிற குடும்பமாக உங்கள் குடும்பம் அமைய கர்த்தருடைய நாமத்தில் வாழ்த்துகிறோம். அந்த ஆசீர்வாதம் உங்கள் குடும்பத்தில் என்றென்றும் நிலைத்திருப்பதாக.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## சுய நலமின்றி....




மண்ணில் : 1181
விண்ணில் : 03-10-1226
ஊர் : அசிசி
நாடு : இத்தாலி
தரிசன பூமி : இத்தாலி

ஒரு பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்தார் பிரான்சிஸ் அசிசி. தந்தை மாபெரும் வியாபாரி. தன் சொத்துக்கள் அனைத்தையும் அனுபவிக்க அசிசியை பழக்கப்படுத்தினார். ஆனால் இவரின் எண்ணங்களோ இறைச் சிந்தையிலும் தவ வாழ்விலுமே நிலைத்து நின்றது.

ஒரு சமயம் பயணம் செய்து கொண்டிருந்தபோது தொழுநோயாளி ஒருவன் அவரிடம் பிச்சைக்கேட்டு வந்தான். நோயைக் கண்டு இவர் பயந்ததால் அவனை விட்டு விரைவாகக் கடந்தார். அதனால் மனதில் அமைதியில்லாமல் காணப்பட்டார். உள்ளத்தில் உறுத்தப்பட்ட அத்தொழுநோயாளியை நோக்கி திரும்பி வந்து தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து அவனைக் கட்டித் தழுவி அவன் கரங்களை முத்தமிட்டார். இச்சம்பவத்தின்மூலம் அவர் சுயநலத்தை விட்டு இறைச்சிந்தையுடன் வாழ ஆரம்பித்தார்.

**'சிறிய சகோதரர்கள்'** என்று இவர் ஆரம்பித்த துறவற சபை 10 ஆண்டுகளில் 5000 பேரை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. துறவிகளில் தன்னை மிகவும் கடையவராக மதித்து வாழ ஆரம்பித்தார். கடவுளின் சிருஷ்டிகள் அனைத்தையும் நேசித்து அவைகளைத் தன் சகோதர சகோதரிகள் என அழைத்தார்.

ஒரு முறை தன் நண்பர் லியோ அவர்களிடம் நாம் போதிக்கச் சொல்வோம் என்று கூறி புறப்பட்டார். இருவரும் நகரத் தெருக்களில் தலைகளைத் தாழ்த்தி அடக்க ஒடுக்கமாகச் சுற்றி அலைந்து இல்லம் திரும்பினர்.

போதிக்காமல் வந்து விட்டோமே என்றார் லியோ. ஏற்கெனவே போதித்துவிட்டோம் உமக்கு ஞாபகமில்லையா? ஜெபம், தூய்மை, அடக்கம், ஒடுக்கம், இறை எண்ணம் கொண்டு வாழ்தல் அதுவே சிறந்த போதனை என்றார் அசிசி.

தன் வாழ்நாள் முழுவதும் எளிமையும், இனிமையுமாக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் தம் பக்கம் ஈர்த்த இவர் 44 வயது வரையே உயிர் வாழ்ந்தார்.

அன்பரே! வார்த்தைகளை விட சத்தமாகப் பேசுவது செயல்கள் என்பதை உணர்ந்து நேர்மையான செயல்களைச் செய்கிறீரா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** “பாவத்தின் வேரை அகற்றாத வரை வாழ்வில் சமாதானம் என்பது எட்டாத கனிதான்.”

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! என் வார்த்தைகளை விட என் செயல்கள் உம்முடைய நாமத்தை பறைசாற்றட்டும்.

**தியானத்திற்கு:-** 2சாமுவேல் 20-21, எரேமியா 24, ரோமர் 12

## நிகழ்வும் ~ பாடமும்

### ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம்

- கோபத்தை வாங்கினால் இரத்தக் கொதிப்பு இலவசம்!
- பொறாமையை வாங்கினால் தலைவலி இலவசம்!
- வெறுப்பை வாங்கினால், பகை இலவசம்!
- கவலையை வாங்கினால் கண்ணீர் இலவசம்!




மாறாக

- நம்பிக்கையை வாங்கினால், நண்பர்கள் இலவசம்!
- உடற்பயிற்சியை வாங்கினால், ஆரோக்கியம் இலவசம்!
- அமைதியை வாங்கினால், ஆனந்தம் இலவசம்!
- நேர்மையை வாங்கினால், நித்திரை இலவசம்!
- அன்பை வாங்கினால், அனைத்து நன்மைகளும் இலவசம்!

இலவசமாக எது வேண்டுமென்று இன்றேனும் முடிவு செய்யுங்கள்.

## கனிவாய் நடக்கும் நற்செயல்:-

**“மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்”**

பலர் பார்வைக்கு வசீகரமாக அன்புக்குரியவர்களாக காட்சியளிக்கின்றனர். ஆனால் கோபம் வந்துவிட்டால் நாகரிகமற்ற காட்டு மிராண்டிகள்போல மாறிவிடுகின்றனர்.




கோபம் இருக்கின்ற இடத்தில் சமாதானம் இருக்க முடியாது. கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டு விடு. பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம் என சங்கீதக்காரர் குறிப்பிடுகின்றார். (சங்.37:8)

நம்மில் பலர் கோபம் என்னும் கொடிய பாவத்திற்கு ஆளாகியிருக்கிறோம், அடிமையாகியிருக்கிறோம். கோபப்படுவது நம்முடைய இயற்கை சுபாவம் என்றும்; நம்முடைய பலவீனம் என்றும்; நம்முடைய பெற்றோரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பிறவிக்குணம் என்றும் சாக்குப்போக்கு சொல்லுகிறோம்.

கட்டுக்கடங்காமல் கோபப்படும்போது அதிக இருதயதுடிப்பு ஏற்படுகிறது. அதிக இருதய துடிப்பு ஏற்படுவதால் உடல் நலம் கெட்டுபோகிறது. கோபம் மின்சாரத்தைப் போன்றது என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார்.

மின்சாரக்கம்பி ஒன்று அறுந்து கீழே கிடந்தால், கவனக்குறைவால் அக்கம்பியின் மீது காலை வைத்து விட்டால், மின்சாரம் அந்நேரத்தில் இருந்தால் எத்தனைப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அது போலவே கோபமும் பாதிப்பை ஏற்படுத்தும். கோபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளால் வேதனைப்படுவோர் அநேகம். கோபத்தோடு எழும்புகிறவன் நஷ்டத்தோடு உட்காருவான் என்பது பழமொழி. கோபத்தை மாற்றுவது என்பது மெதுவான மறுபதில்; அவ்விதமாய் மெதுவான மாறுத்தரம் சொல்லத் தீர்மானித்து, கொல்லும் கொடிய பாவங்களில் ஒன்றான கோபத்தை தவிர்த்து கனிவாய் நடக்கும் நற்செயலைப் பெற்றுக்கொள்ள முயல்வோம்.

## நிதானமாய் நடக்கும் நற்செயல்:-

**"நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்....."**

கடவுள் தமது சாயலில் மானுடத்தை படைத்து, தமது குணமுடையோராய் அவர்கள் நடக்க விரும்புகின்றார். மனிதர்களில் நேர்மையாய் நடப்பவர்களும் இருக்கின்றனர். நெறி தவறி நடப்பவர்களும் இருக்கின்றனர். நிதானமாய் (நேர்மையாய்) நடக்க வேண்டுமெனில் இறையச்சம் (தெய்வபயம்) மானுடருக்குத் தேவை. இறையச்சம் கொள்வது என்றால், இறைவன் நம்மைத் தண்டிப்பார் என்பதற்காகப் பயந்து நடுங்குவதல்ல, மாறாக இறையுறவைச் சிதைத்து விட்டால், அன்புறவை விரும்பும், அன்புறவில் மகிழ விரும்பும் இறைவன் நொந்து விடுவாரே என்பதற்காகப் பயப்படும் பயமாகும்.

இறைபயம் (அச்சம்) இறைவனின் ஞானத்தை நமக்குத் தரும். இறைஞானம் ஆக்கும் ஆற்றலின் பக்கம் மட்டுமே இருக்கும். இது மானுட துயரங்களைக் கண்டு மனம்நோகும் (நீதி 14:16). இறைஞானம் உடையவர்கள், சிந்தனையிலும், செயலிலும் நேர்மையுடையவர்களாயிருப்பார்கள். இவர்களின் வாயின் வார்த்தைகள் தங்களைக் காப்பதுடன் பிறரையும் காப்பாற்றும். இவர்கள் பொய்சாட்சி சொல்லாது, பரிகாசம் செய்யாது, மூடராய், முரடராய் முரண்படாமல் வாழ்வர்.

இறைவன் மானுடத்திற்கு வகுத்த பாதையினின்று பாதை மாறிப் போகிறவர்கள், பாவம் செய்வதுடன் நேர்மையானவர்களைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். இயேசுவானவர் தம்மை அனுப்பியவர் தமக்கென வகுத்த பாதையில் நேர்மையாய்ப் பயணம் செய்தார். ஆனால் அருள்நாதரை நேர்மையற்றவர்கள் இகழ்ந்தனர். (லூக்கா 23:35). கொடியவர்களின் இகழ்ச்சியைக் கண்டு இயேசு நாதர் வேதனையடைந்தார். ஆனால் அவர்களின் பாதையை அவர் பின்பற்றவில்லை. இயேசு நேர்மையான பாதையில் நடந்ததால் நித்திய வாழ்வு பரிசானது.

நாமும் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்தால் பரிசு உண்டு என்பதைத் தூய பவுலடிகளார் உறுதி செய்துள்ளார் (2தீமோ. 4:8). நாம் நிதானமாகிய நற்செயலை கடைபிடித்து நிதானத்தோடு, விவேகத்தோடு வாழ முயற்சிப்போமாக.

- **V.G மஹிழா ஜெங்கின் ராஜ்**

## ஆகஸ்ட் 2021 மாத கேள்விகள்

### (1 கொரிந்தியர் 1 முதல் 8 முடிய)

1. அன்பு எதை உண்டாக்கும்?
2. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக எப்படி இருக்கிறது?
3. பண்டிகையை ஆசரிக்க புளிப்பில்லாத அப்பமாக செயல்படுவது எது?
4. இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு தேவபெலனாயிருக்கிறது எது?
5. யாரைக் குறித்து கர்த்தரால் எனக்குக் கட்டளை இல்லை என்று பவுல் கூறுகிறார்?
6. உக்கிராணக்காரன் எப்படிக் காணப்படுவது அவசியம்?
7. தேறினவர்களுக்குள்ளே எதை பேசுகிறோம்?
8. தேவனால் அறியப்பட்டிருக்கிறவன் யார்?
9. அடையாளத்தை கேட்கிறவர்கள் யார்?
10. தேவனுடைய ராஜ்யம் எதில் உண்டாயிருக்கிறது?
11. மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் எதினால் கட்டப்பட்டிருக்கிறாள்?
12. யாருடைய சிந்தனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்?
13. வாக்குவாதங்கள் உண்டென்று எந்த வீட்டாரால் பவுலுக்கு அறிவிக்கப்பட்டது?
14. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தீர்ப்பு செய்வது யார்?
15. தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளாதவன் யார்?
16. யாரை தேவன் கெடுப்பார்?
17. யாரை வெட்கப்படுத்தும்படி தேவன் பைத்தியமானவைகளை உலகத்தில் தெரிந்துகொண்டார்?
18. புத்தியுள்ள சிற்பாசாரியால் போடப்பட்டது எது?
19. அவிசுவாசியான புருஷன் யாரால் பரிசுத்தமாக்கப்படுகிறான்?
20. எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவன் யார்?

## ஜுலை 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. பலவீனமானது (2கொரி. 10:10)
2. பரலோகத்திலே (2கொரி. 5:1)

3. உத்தமன் (2கொரி. 10:18)
4. தேவன் (2கொரி. 1:21)
5. காணப்படாதவைகள் (2கொரி. 4:18)
6. தர்மசகாயமாகியப் பணிவிடை (2கொரி. 9:12)
7. விடுதலை (2கொரி. 3:17)
8. அசுத்தமானதை (2கொரி. 6:17)
9. கர்த்தரைக்குறித்து (2கொரி. 10:17)
10. ஆவியென்னும் அச்சாரம் (2கொரி. 1:22, 5:5)
11. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்க்கு முன்பாக (2கொரி. 5:10)
12. சகோதரனாகிய தீத்துவை (2கொரி. 2:13)
13. கர்த்தருக்கும், மனுஷருக்கும் (2கொரி. 8:21)
14. எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது (2கொரி. 3:6)
15. லௌகிக துக்கமோ (2கொரி. 7:10)
16. புத்திமான்களல்லாதவர்கள் (2கொரி. 10:12)
17. கிருபை (2கொரி. 4:15)
18. உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் (2கொரி. 9:7)
19. புதுசிருஷ்டியாயிருக்கிறான் (2கொரி. 5:17)
20. கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது (2கொரி. 3:16)

## ஜுலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin |
| Mrs. Aspin Bejo | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Boopathi Baskar | Mrs. Nisha Rajan |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Percy Jean |
| Mrs. Felsi Rani John | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Thamari Johnson |
| Mrs. Juslin Jaslin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Leela Gladson | Mrs. Virgin Jegatha Jino |

## ஆகஸ்ட் 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 51 முதல் 60 முடிய)

1. கரிநெருப்பை ஊதி, ஆயுதத்தை உண்டுபண்ணுகிறவன் யார்?
2. எத்தேசத்தின் கப்பல்கள் கர்த்தருக்கு காத்திருக்கும்?
3. கர்த்தரால் மீட்கப்பட்டவர்களின் தலையின்மேல் என்ன இருக்கும்?
4. என்றும் அழியாத நித்திய நாமத்தை யாருக்கு அருளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
5. கர்த்தர் எதைச் சால்வையாகப் போர்த்துகொண்டார்?
6. கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தை வாங்கி குடித்திருக்கும் தேசம் எது?
7. மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிறது எது?
8. கர்த்தரை நம்பியிருக்கிறவன் எங்கு காணியாட்சிக்காரனாயிருப்பான்?
9. யாருடைய பாதங்கள் மலைகளின்மேல் அழகாயிருக்கிறது?
10. எது வெறுமையாய் திரும்பாமல், விரும்புகிறதை செய்து முடிக்கும்?
11. எந்த நாளில் உனக்கு இஷ்டமானதைச் செய்யக்கூடாது?
12. கர்த்தர் யாரை தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்?
13. சேபாவில் உள்ளவர்கள் ஆலயத்தில் கொண்டுவருவது எது?
14. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் எது நிலைபெயராமல் இருக்கும்?
15. தீங்குவராததற்கு முன்னே யார் எடுத்துக்கொள்ளப்படுகிறான்?
16. கர்த்தருடைய கரத்தின் நிழலினால் மறைக்கப்பட்டது எது?
17. கொழுப்பான பதார்த்தத்தினால் எது மகிழ்ச்சியாகும்?
18. தேவனுக்கும் நமக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குவது எது?
19. துன்மார்க்கருக்கு எது இல்லையென்று தேவன் சொல்லுகிறார்?
20. முட்செடிக்கு பதிலாக முளைப்பது எது?

## ஜூலை 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஒளிப்பிடத்தில் - ஏசாயா 45:4
2. சமாதானம் - ஏசாயா 48:22
3. சூரியோதய திசையிலிருந்து – ஏசாயா 41:25
4. வலதுகை – ஏசாயா 48:13
5. விக்கிரகங்களுக்கு – ஏசாயா 42:8
6. அலரிச்செடி – ஏசாயா 44:4
7. பெலவந்தனால் - ஏசாயா 49:25
8. வீணர் - ஏசாயா 44:9
9. கிழக்கிலிருந்து – ஏசாயா 46:11
10. நாள் உண்டாகததற்கு முன் - ஏசாயா 43:13
11. கல்தேயரின் குமாரத்தி – ஏசாயா 47:5
12. கர்த்தருடைய வேதத்துக்கு – ஏசாயா 42:4
13. சமாதானம் நதியைப்போலும், நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும் - ஏசாயா 48:18
14. யாக்கோபு என்னும் பூச்சியே இஸ்ரவேலின் சிறுகூட்டமே – ஏசாயா 41:14
15. துலக்கமான அம்பு – ஏசாயா 49:1-3
16. வேதத்தை – ஏசாயா 42:21
17. கர்த்தருக்குப் பிரியமானவன் - ஏசாயா 48:14
18. இளைப்படைந்தவனுக்கு – ஏசாயா 50:4
19. பணங்களால் - ஏசாயா 43:24
20. விக்கிரகங்கள் - ஏசாயா 41:29

## ஜூலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Justus Martin |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Rajan V. N. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |
| Mr. Johan Pratheep | Mr. Sujith Gladson |

## May God Bless All

## Birthday Celebrants – August 2021

| | |
|---|---|
| 01st August | Mrs. Baby Rajakumari, W/o Mr. Immanuel Prince |
| 02nd August | Mr. Jino Retna Kumar |
| 05th August | Mr. S. Augustin Dhayanantha Raj |
| 05th August | Mrs. Rupa, W/o Mr. T.N. Berjin |
| 06th August | Master. Edric Edward, S/o Mr. Edward Sam |
| 14th August | Mr. W. Santhosh Christopher |
| 19th August | Mr. G. Anantha Raj |
| 23rd August | Master. Joash, S/o Mr. Vinobha |
| 23rd August | Mr. S. Jasper Stalin |
| 24th August | Mr. Merlin |
| 28th August | Miss. Alen D. Vijitha, D/o Mr. Devaraj |
| 29th August | Mr. Rejicilin |
| 31st August | Mr. Pratheesh |

## Wedding Day Anniversaries – August 2021

| | |
|---|---|
| 04th August | Mr. Robin Devadhas & Mrs. Golden Irene Sheeja |
| 06th August | Mr. Jones & Mrs. Sumathy |
| 17th August | Mr. S. Jasper Stalin & Mrs. P. N. Sobia |
| 19th August | Mr. Berin Raja & Mrs. Femila |
| 27th August | Mr. Satheeskumar & Mrs. Angel Shiny |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. **“ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மேன்மைப்படுத்துவாய். சங். 50:15”** கஷ்ட நோய்ப்படுக்கையில் விடுதலைக்காய் கர்த்தரை நோக்கி மன்றாடும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவேண்டல் புரிவோம். கோவிட்-19 நோய் அறிகுறியால் தனிமைப்படுத்தப்பட்டு உணவு பராமரிப்பு இல்லாமல் அழுது கொண்டிருக்கும் மக்களை அரசும், திருச்சபைகளும் அடையாளம் கண்டு ஆதரவு தரும்படியாய் இறைவேண்டல் புரிவோம். மிக விரைவாக மருந்து அனைத்து மக்களுக்கும் தரப்பட்டு நோய்தொற்று முற்றிலும் நீங்கும்படியாய் மரணத்தின் பிடியிலிருந்து மக்கள் காக்கப்படும்படியாய் இறைவேண்டல் புரிவோம்.
2. கோவிட்-19 என்னும் கொடும் நோய் கண்டு அஞ்சாமல் தங்கள் பணிகளை உண்மையாய் நிறைவேற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளவர்கள், சுகாதர துறை ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இப்பணியில் நேரிடையாக தங்களை இணைத்துள்ள அனைத்து ஊழியர்களுக்காகவும் இறைவேண்டல் புரிவோம்.
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
4. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – ஆகஸ்ட் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 1 | ஞாயிறு | ஏசாயா 6:1-8 | ஏசாயா 6:8 | ஏசாயா 65-66 |
| ஆகஸ்ட் 2 | திங்கள் | யாத். 12:21-28 | யாத். 12:27 | எரேமியா 1-4 |
| ஆகஸ்ட் 3 | செவ்வாய் | 2கொரி. 3:12-18 | 2கொரி. 3:17 | எரேமியா 5-8 |
| ஆகஸ்ட் 4 | புதன் | யோவா. 8:31-41 | யோவா. 8:32 | எரேமியா 9-11 |
| ஆகஸ்ட் 5 | வியாழன் | அப். 9:10-18 | அப். 9:16 | எரேமியா 12-14 |
| **ஆகஸ்ட் 6** | **வெள்ளி** | **மாற். 5:35-45** | **மாற். 5:41** | **எரேமியா 15-19** |
| ஆகஸ்ட் 7 | சனி | யாத். 23:20-30 | யாத். 23:25 | எரேமியா 20-23 |
| ஆகஸ்ட் 8 | ஞாயிறு | 1கொரி. 13:1-13 | 1கொரி.13:13 | எரேமியா 24-26 |
| ஆகஸ்ட் 9 | திங்கள் | ஏசா. 41:14-20 | ஏசா. 41:14 | எரேமியா 27-29 |
| ஆகஸ்ட் 10 | செவ்வாய் | சங். 10:12-18 | சங். 10:14 | எரேமியா 30-31 |
| ஆகஸ்ட் 11 | புதன் | மாற். 7:31-37 | மாற். 7:34 | எரேமியா 32-34 |
| ஆகஸ்ட் 12 | வியாழன் | லூக். 10:13-17 | லூக். 10:16 | எரேமியா 35-37 |
| **ஆகஸ்ட் 13** | **வெள்ளி** | **மாற். 5:1-20** | **மாற். 5:8** | **எரேமியா 38-41** |
| ஆகஸ்ட் 14 | சனி | மத். 14:22-33 | மத். 14:31 | எரேமியா 42-45 |
| ஆகஸ்ட் 15 | ஞாயிறு | மத். 5:38-48 | மத். 5:48 | எரேமியா 46-48 |
| ஆகஸ்ட் 16 | திங்கள் | சங். 51:1-13 | சங். 51:12 | எரேமியா 49 |
| ஆகஸ்ட் 17 | செவ்வாய் | கொலோ. 1:5-13 | கொலோ.1:13 | எரேமியா 50 |
| ஆகஸ்ட் 18 | புதன் | மத். 11:28-30 | மத். 11:30 | எரேமியா 51-52 |
| ஆகஸ்ட் 19 | வியாழன் | லூக். 5:1-11 | லூக். 5:8 | புலம்பல் 1-2 |
| **ஆகஸ்ட் 20** | **வெள்ளி** | **லூக். 19: 1-10** | **லூக். 19:10** | **புலம்பல் 3-5** |
| ஆகஸ்ட் 21 | சனி | ரோமர் 7:1-6 | ரோமர் 7:6 | எசேக். 1-4 |
| ஆகஸ்ட் 22 | ஞாயிறு | 1கொரி.11:23-30 | 1கொரி.11:24 | எசேக். 5-9 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 23 | திங்கள் | எபி. 7:20-28 | எபி. 7:22 | எசேக். 10-13 |
| ஆகஸ்ட் 24 | செவ்வாய் | கலா. 5:1-10 | கலா. 5:1 | எசேக். 14-16 |
| ஆகஸ்ட் 25 | புதன் | மத். 15:21-28 | மத். 15:28 | எசேக். 17-19 |
| ஆகஸ்ட் 26 | வியாழன் | கொலோ. 3:9-15 | கொலோ.3:11 | எசேக். 20-21 |
| **ஆகஸ்ட் 27** | **வெள்ளி** | **ஆதி. 21:9-20** | **ஆதி. 21:17** | **எசேக். 22-23** |
| ஆகஸ்ட் 28 | சனி | மாற். 4:35-40 | மாற். 4:39 | எசேக். 24-26 |
| ஆகஸ்ட் 29 | ஞாயிறு | அப். 8:26-40 | அப். 8:35 | எசேக். 27-28 |
| ஆகஸ்ட் 30 | திங்கள் | அப். 10:34-43 | அப். 10:43 | எசேக். 29-31 |
| ஆகஸ்ட் 31 | செவ்வாய் | லூக். 4:14-21 | லூக். 4:18 | எசேக். 32-33 |
| செப்டம்பர் 1 | புதன் | ஆதி. 9:8-17 | ஆதி. 9:10 | எசேக். 34-36 |
| செப்டம்பர் 2 | வியாழன் | சங். 147:1-11 | சங். 147:2 | எசேக். 37-39 |
| **செப்டம்பர் 3** | **வெள்ளி** | **மாற். 10:1-12** | **மாற். 10:8** | **எசேக். 40-42** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஆகஸ்ட் 2021

| | | |
|---|---|---|
| 06-08-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Nisha Broosewelt |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Isaac Solomon |
| 13-08-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Nisha Rajan |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jean C. R. Shibin |
| 20-08-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Paulin Shabila |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jenkin Raj |
| 27-08-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Percy Jean |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino John |
| 03-09-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sarah Raja Singh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino Retna Kumar |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**